## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் - 2018

---

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.4 மற்றும் 1.5 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள்

### 1.4.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 | | |
| நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்றினால் நியமத்தால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஒன்றுடனொன்று எதிரீடு செயய்யப்படக் கூடாத போதிலும் ரூபா 5,565,112 தொகையான கணக்கீட்டுத் தவறுகள் காரணமாக ஏற்பட்ட வரவு மீதிகள் ரூபா 97,602,473 தொகையான செலுத்த வேண்டிய முகவர் தரகுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக செலுத்த வேண்டிய முகவர் தரகு மீதி ரூபா 92,037,361 ஆக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | இது கட்டுப்பாட்டு கணக்கொன்றாக உள்ளதன் காரணமாக முகவர் தரகு கணக்கின் தேறிய பெறுமதி மாத்திரமே பேரேட்டில் காட்டப்பட்டிருந்தது. எனினும் விபரமான பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இதில் வரவு மற்றும் செலவு மீதிகள் தனித்தனியாக காட்டப்பட்டிருந்தன. | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 2 | | |
| நியமத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக்கள் கிரயம் அல்லது தேறிய நிகரப் பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 206,739,963 தொகையான இருப்புக்கள் தேறிய நிகரப் பெறுமதி கணிப்பிடப்படாது நிதிக்கூற்றுக்களில் கிரயத்தில் காண்பிக்கப்பட்டிருந்தன. இந்த இருப்பில் பௌதீக ரீதியாக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்ட ரூபா 9,929,561 மீதியில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத ரூபா 254,763 பெறுமதியான ரோணர் (toner) இருப்பு மீதியும் அசைவற்ற ரூபா 434,177 தொகையான டிவிடி (DVD) மற்றும் ரோணர் இருப்பு மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | இருப்பில் உள்ளடக்கப்பட்ட பயன்படுத்த முடியாத பொருட்கள் மற்றும் அசைவற்ற பொருட்களின் பெறுமதிகள் இதுவரை அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள இருப்பிலிருந்து நீக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

| | | |
|---|---|---|
| நியமத்தின் 79(ஆ) பிரிவின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஏதாவது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் முன்கொண்டுசெல்லும் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் 3.3 ஆம் இலக்கமானது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் குறிப்பொன்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 26 ஆம் பக்கத்தில் 8 ஆம் இலக்கத்தின் கீழ் உரிய பெறுமதிகளிற்குரிய குறிப்பொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கெதிராக ரூபா 754,000,000 தொகையான இழப்பீட்டை கோரி வெளித் தரப்பினர்களால் ஒன்பது நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 12 ஆம் பக்கத்தில் குறிப்பு 3.11 அருவச் சொத்துக்களின் கீழ் இது தொடர்பில் உரிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38

| | | |
|---|---|---|
| நியமத்தின் 118 (இ) பந்தியின் பிரகாரம் நிதியாண்டின் ஆரம்ப மற்றும் இறுதி திகதிகளில் உள்ளவாறான அருவச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி மற்றும் திரண்ட காலக்கழிவுத் தொகை என்பன வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அச் சொத்துக்களின் கிரயத்திற்குப் பதிலாக அருவச் சொத்துக்களின் தேறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திரண்ட காலக்கழிவுப் பெறுமதியும் அதே போல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அருவச் சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட காலக்கழிவு தொடர்பான குறிப்பு நிதிக்கூற்றுக்களிற்குரிய பட்டியல்களுடன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அடுத்த ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் இதனை உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

| | | |
|---|---|---|
| நியமத்தின் பிரகாரம் முதலீடுகள் நிதிக்கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் காட்டப்பட வேண்டிய போதிலும் லங்கா புவத் லிமிட்டட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,104,000 தொகையான முதலீடு கூட்டுத்தாபனத்தால் நிதிக்கூற்றுக்களில் கிரயத்தில் காட்டப்பட்டிருந்ததுடன் முதலீடு | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல். |

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | அதிகரித்தல் அல்லது குறைவடைதலினை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் தற்போது அத்தகைய நிறுவனம் காணப்படாதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (எஸ்எல்எவ்ஆர்எஸ்) | | |
| | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் செயற்பாடுகளின் போது பயன்பாட்டிலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,161,875,819 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.4.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் மாதத்தில் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 100,000,000 தொகையான நிதி மானியம் பெறப்பட்டிருந்த போதிலும் அம் மானியம் மீளாய்வாண்டின் போது காலக்கழிவிடப்பட்டிருக்காததுடன் 2016 ஆம் ஆண்டில் மானியமாக பெறப்பட்டிருந்த ரூபா 11,500,000 பெறுமதியான வாகனமொன்று அது பெறப்பட்டிருந்த நாளிலிருந்து காலக்கழிவிடப்பட்டிருந்தது. | ரூபா 100 மில்லியன் மானியத்திற்குரிய சொத்தின் கொள்வனவு செயற்பாடு 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஆகையால் அப் பெறுமதியின் காலக்கழிவு சொத்துக்களின் பெறுமனத்தேய்விற்கு இணங்க உரிய சொத்துக்கள் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும். | காலக்கழிவிற்கான கணக்கீட்டுக் கொள்கை மற்றும் அக் கொள்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய காலக்கழிவு என்பவற்றை வெளிப்படுத்துதல் |
| | மானியத்தின் காலக்கழிவு ஆரம்பிக்கும் திகதி | 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மானியம் ரூபா 11,500,000 | |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் காலக்கழிவின் சரியானதன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது. | பெறுமதியான 2 வாகனங்களாக காணப்பட்டதுடன் அவ் வாகனங்கள் அவை பெறப்பட்ட திகதியிலிருந்து பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. ஆகையால் அதே போல் காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

### 1.4.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 50 அத்தியாயங்களை (episodes) கொண்டிருந்த "Sobhadhara" உரிய நேரத்தில் ஆய்வு சுற்றாடல் நிகழ்ச்சித்திட்ட (timely exploration environment programme) தொடரினை தயாரித்து ஒளிபரப்புச் செய்வதற்காக 2017 திசெம்பர் 29 இல் கூட்டுத்தாபனத்திற்கும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 50 ஆவது அத்தியாயம் 2018 திசெம்பர் 28 இல் ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் இறுதி 10 அத்தியாயங்கள் தொடர்பாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 5,000,000 தொகை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | Sobhadhara நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி அத்தியாயத்திற்குரிய இறுதி விலைச்சிட்டை 2018 திசெம்பர் 28 இல் தயாரிக்கப்பட்டு 2019 சனவரியின் முதலாவது வாரத்தில் வழங்கப்பட்டிருந்தது. அவ் விலைச்சிட்டையின் பெறுமதி அவ்வாறு சனவரியில் பெறப்பட்டு அது முன்னைய ஆண்டுச் சீராக்கங்களின் கீழ் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 10 அத்தியாயங்களை கொண்ட ''பிவிதுறு பியச'' பெயரிலான கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்ட தொடர்களை தயாரித்து ஒளிபரப்புச் செய்வதற்காக 2018 மார்ச் 01 தொடக்கம் 2018 ஆகஸ்ட் 31 வரையான 6 மாதங்கள் வலுவாகவுள்ள உடன்படிக்கையொன்று கூட்டுத்தாபனத்திற்கும் கொழும்பு மாநகர சபைக்கும் இடையில் | ''பிவிதுறு பியச'' நிகழ்ச்சித்திட்ட தொடர்களை தயாரிப்பதற்காக கொழும்பு மாநகர சபையுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்ட பின்னர் உரிய பெறுமதி பெறவேண்டிய வருமானமாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 7 நாட்களினுள் கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிறுவனத்தின் | உரிய உடன்படிக்கையின் செல்லுபடியாகும் காலப்பகுதி 2018 ஆகஸ்ட் 31 இலிருந்து முடிவடைந்திருந்தது. ஆகையால் அப் பணத் தொகை பெற வேண்டிய தொகையொன்றாக காட்டப்பட முடியாதிருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் அத்தியாயம் ஒன்றிற்கு ரூபா 366,432 வீதம் 10 அத்தியாயங்களிற்காக அதன் மீது பெறவேண்டிய ரூபா 3,664,320 தொகையான மொத்த வருமானம் ஏனைய வருமானத்தின் கீழ் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அத் தொகை 7 நாட்களினுள் கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட வேண்டிய போதிலும் அது கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை அல்லது கூட்டுத்தாபனத்தால் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அவ் வேலையின் ஊடாக வருமானம் ஈட்டப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ஏனைய வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் என்பன ரூபா 3,664,320 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உள்ளக சிக்கலொன்றின் விளைவாக அந் நிகழ்ச்சித்திட்ட தொடர்களின் தயாரிப்புக்கள் தடைப்பட்டிருந்தன. எனினும் இதுவரை உத்தியோகபூர்வமாக இது அறிவிக்கப்பட்டிருக்காததுடன் அப் பெறுமதி பெறவேண்டிய வருமானமாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | இது வருமானத்திலிருந்து நீக்கப்பட வேண்டும். |

### 1.4.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | உப ஏடுகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| திரண்ட பெறுமானத்தேய்வு | 3,508,843,034 | 3,521,799,983 | 12,956,949 | பதிலளிக்கப்படவில்லை | வேறுபாட்டிற்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.4.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தன. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நட்டங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 479,000,000 தொகையான அரசாங்க மானியம் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை . | சாதகமான நிதி முகாமைத்துவமொன்று அமுல்ப்படுத்தப்பட வேண்டும் |

காரணமாக 2018 ஆம் ஆண்டில் ரூபா 188,800,669 தொகையான இலாபம் அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும் 2014 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 135,658 தொகையான வங்கி மேலதிகப்பற்று 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 244,300,445 வரை அதிகரித்திருந்தது. ஆகையால் திறைசேரி அல்லது அரசாங்கத்தின் நிதி உதவியின்றி கூட்டுத்தாபனம் தொடந்தியங்குவது நிச்சயமற்றிருந்தது.

### 1.4.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | செலுத்த வேண்டிய முகவர் தரகு | 92,037,360 | வயதுப் பகுப்பாய்வு | செலுத்த வேண்டிய முகவர் தரகு தொடர்பான வயதுப் பகுப்பாய்வு ஒன்றினை வழங்குவதற்கான வசதி ஏற்கனவேயுள்ள கணனி முறைமையில் காணப்படாத போதிலும் இது தொடர்பாக விரைவில் கணனி முறைமையை நவீன மயப்படுத்தி வயதுப் பகுப்பாய்வினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அறவிடப்பட முடியாத கடன்பட்டோர் மீதிகள் | 58,459,978 | கடன்பட்டோரை இனங்காண்பதற்கான விதிமுறைகள் | நட்டக்கழிவு ஏற்பாட்டினை கணிப்பீடு செய்யும் போது முழுமையாக அறவிடப்பட முடியாத கடன்பட்டோரை இனங்காண்பதற்கு கடன்பட்டோர் வயதுப் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டதுடன் அதற்கிணங்க 5 ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்படுகின்ற மீதிகளிற்கு 100 சதவீத நட்டக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அறவிட முடியாதவையாக கடன்பட்டோரை இனங்காண்பதற்கான காரணங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | முதலீடுகள் (லங்கா புவத் பங்கு மூலதனம்) | 1,104,000 | பங்குச் சான்றிதழ்கள் | பதிலளிக்கப்படவில்லை. | பங்குச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுதல் |

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் கடன் கொள்கையின் பிரகாரம் கடன் | கூட்டுத்தாபனத்தின் கொள்கையின் பிரகாரம் | கடன்பட்டோர்களிடமிருந்து தாமதமின்றி |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதி ஒரு மாதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 78 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 415,334,848 தொகை அக் காலப்பகுதியை விஞ்சியிருந்ததுடன் அதில் 14 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 72,377,998 தொகை 5 ஆண்டுகளை விஞ்சியிருந்தது. | கடன் காலப்பகுதி ஒரு மாதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய ஒரு மாத காலப்பகுதியில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் நடைமுறையில் காணப்பட்டன. உதாரணம்:- சில சந்தர்ப்பங்களில், ஒரு மாத காலப்பகுதியை விஞ்சி கிரிக்கற் போட்டிகள் அல்லது ஏனைய அத்தகைய நீண்டகால நிகழ்ச்சித்திட்டம் ஒளிபரப்பப்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் முழுமையான ஒளிபரப்பு பூர்த்தியடைந்த பின்னர் விலைச் சிட்டைகள் வழங்கப்படுவதுடன் அதேபோல் விலைச்சிட்டைகள் வழங்கப்பட்ட பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் ஒரு மாதத்தினை விடக் குறைவான காலப்பகுதியினுள் இது ஒளிபரப்பப்பட்டிருந்த போதிலும் விளம்பரங்கள் ஒளிபரப்பு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் கொடுப்பனவுகள் தாமதமடைய முடியும். | அறவீடுகளை மேற்கொள்வதற்கும், தாமதமான காலப்பகுதி மீது தண்டப்பணங்களை விதிப்பதற்கும் தாமதமின்றி சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோரின் மொத்தப் பெறுமதியில் ரூபா 258,549,697 தொகை அல்லது 48 சதவீதம் ரூபா 5 மில்லியன் பெறுமதியை விஞ்சிய 12 கடன்பட்டோர்களுடன் செய்துகொள்ளப்பட்ட 21 உடன்படிக்கைகளை பிரிதிநிதித்துவப்படுத்தியிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட கடன்பட்டோர் பெறுமதியில் 2014 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக தேசிய சேமிப்பு | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகள் முறையாக கைச்சாத்திடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வங்கியிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 10,000,000 தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய சேமிப்பு வங்கி முறையாக உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருக்காததன் காரணமாக அறவிடும் தன்மை நிச்சயமற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | கூட்டுத்தாபனம் வாடிக்கையாளர்களுடன் முறையாக உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருக்காதமை மற்றும் அவர்களது முகவரிகளை கண்டுபிடிக்க முடியாதிருந்தமை காரணமாக 4 கடன்பட்டோர்களிற்குரிய ரூபா 2,129,262 மீதி தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு பெறவேண்டிய ரூபா 534,003,529 கடன்பட்டோர் மீதியில் 5 ஆண்டுகளை விஞ்சியிருந்த கடன்பட்டோர் மீதி ரூபா 72,377,998 ஆக இருந்தது. அதில் 24 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 17,281,155 தொகையை மாத்திரமே அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. ரூபா 33,134,937 கடன்பட்டோர் மீதிகளின் மொத்த தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என முன்னைய ஆண்டில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் மீளாய்வாண்டின் போது எந்தவொரு செயன்முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமை, அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு பெறுமதிகள் போதியளவாக காணப்படாதமை, பரிந்துரைக் கால வரையறை (terms of prescription) காலாவதியாகியிருத்தல் அல்லது மேலதிகமாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமை போன்ற காரணங்களினால் பதிவளிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டு சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த ரூபா 21,461,907 தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 534,003,529 கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 24 இல் அம் மீதியை பதிவளிப்பதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் நாளதுவரை பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 1969 இன் 68 ஆம் இலக்க காலாவதியாகுதல் அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் கடன்களை செலுத்த தவறுகின்ற சேவைநாடுநர்களிடமிருந்து கடன்களை அறவீடு செய்வதற்கு 6 ஆண்டுகளினுள் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் உரிய காலப்பகுதியினுள் நடவடிக்கைகள் எடுப்பதற்கு சாத்தியமற்றதாக காணப்பட்டால் பரிந்துரை கால வரையறை காலாவதியாகி இருக்கும். எனினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 ஆண்டுகள் கடந்திருந்த 70 கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 45,305,890 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 534,003,529 கடன்பட்டோர் மீதியில் 6 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,118,529 தொகைக்காக மாத்திரமே கூட்டுத்தாபனத்தால் உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்தன. | கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனைத்து சேவைநாடும் கடன்பட்டோர்களிற்கும் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | அனைத்துக் கடன்பட்டோர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் கோரப்பட வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மீள் வியாபார (Contra deal) கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ரூபா 3,520,954 செலவு மீதியொன்று 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 19,004,079 செலவு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் கூட்டுத்தாபனம் சேவைநாடுநர்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருக்காததன் காரணமாக அம் மீதியை கோரும் நிலைமையொன்றில் சேவைநாடுநர்கள் காணப்படவில்லை. எனினும் அம் மீதியை வருமானத்திற்கு எடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சேவைநாடும் கடன்பட்டோர் மீதிகள் 6 ஆண்டுகள் கடந்த பின்னர் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமென கருதப்படுகின்றன. ஆகையால் 6 ஆண்டுகள் கடந்த பின்னர் வருமானத்திற்கு ரூபா 3,520,954 தொகையான மீள் வியாபார பெறுமதியை செலவு வைப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன்களை அறவீடு செய்வதற்கு முறையாக கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் முறையாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ரூபா | | |
| **(அ) இலங்கை சனனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| (i) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) பிரிவு | | | |
| • ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய செயல் நிமித்த கட்டுநிதி ரூபா 100,000 ஆக காணப்பட்ட போதிலும் நிகழச்சித்திட்டங்கள், | 18,533,375 | ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய செயல் நிமித்த கட்டுநிதி ரூபா 100,000 ஆக காணப்பட்ட போதிலும் கூட்டுத்தாபன | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| தங்குமிட வசதிகள், வழங்கல்கள் மற்றும் கொள்வனவுகளிற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆகக்கூடிய கட்டுநிதி எல்லையை விஞ்சி 85 சந்தர்ப்பங்களின் போது செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | | செயற்பாடுகளின் தன்மையின் பிரகாரம் அவ் எல்லையை விஞ்சி முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியிருந்தன. | |
| • பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களிற்கு மாத்திரமே செயல்நிமித்தக் கட்டுநிதி வழங்கப்படக்கூடியதாக இருந்த போதிலும் 76 சந்தர்ப்பங்களின் போது பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | 16,648,185 | பெரிய பணத் தொகை செலவிடப்பட்டதன் காரணமாக நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு செயன்முறையின் போது மேற்படி தொகையை விஞ்சி தயாரிப்பாளர்களிற்கு முற்பணங்கள் செலுத்தப்பட வேண்டியிருந்தன. | |
| • வழங்கப்பட்ட கட்டுநிதி உரிய நோக்கம் பூர்த்தியடைந்ததும் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 செப்தெம்பரில் 114 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 3,629,920 தொகையான முற்பணங்கள் 03 நாட்கள் தொடக்கம் 260 நாட்கள் வரையான தாமதமொன்றுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட முற்பணம் 2019 மே 20 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2,018,247 | பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களிற்கு மாத்திரமே செயல்நிமித்தக் கட்டுநிதி வழங்கப்படக்கூடியதாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்கள் பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களாக காணப்படாத போதிலும் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்காக தயாரிப்பாளர்களால் உரிய முற்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்ததால் அம் முற்பணங்கள் அவர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தன. | |
| **(ii) நிதிப்பிரமாணம் 396** | | | |
| கொடுப்பனவிற்கான காசோலையின் செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவடையும் போது இரத்துச் செய்யப்பட்ட காசோலையின் பெறுமதி செலுத்த வேண்டியவையாக உரிய பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் பொறுப்பொன்றாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தன. 2013, 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் முறையே ரூபா 3,878,848, ரூபா 86,535, ரூபா 4,992,832, ரூபா 453,843, ரூபா 10,298,794 மற்றும் ரூபா 11,478,290 | 31,189,142 | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் குறிப்பிடத்தக்களவு தொகை வருடாந்தம் கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்றது. நிதி நிலைமைக் கூற்றுக்களில் ஒவ்வொரு பெயரின் கீழ் அவற்றை குறிப்பிடுவது நடைமுறைச் சாத்தியமற்றிருப்பதால் காசோலைகளின் மொத்தப் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. இறுதிக் கணக்குகளுடன் சேர்த்து வழங்கப்பட்டிருந்த பட்டியல்களில் உரிய விபரங்கள் | நிதிப்பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| தொகையான பெறுமதிகள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | | குறிப்பிடப்பட்டிருந்தன. | |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு** | | | |
| மணித்தியாலம் ஒன்றிற்கான சராசரி மேலதிக நேரக் கொடுப்பனவு நாள் கொடுப்பனவின் 1/8 ஆக காணப்பட வேண்டிதுடன் நாள் கொடுப்பனவு மாதாந்த திரட்டிய சம்பளத்தின் 1/30 ஆகக் காணப்பட வேண்டும். அத்துடன் வாழ்க்கைச் செலவுப்படி கருத்தில் கொள்ளப்படக் கூடாது. எனினும் கூட்டுத்தாபன ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்திற்கு வாழ்க்கைச் செலவுப் படி, உணவுப் படி மற்றும் சீராக்கல் படி என்பன மாதாந்த திரட்டிய சம்பளமாக கருத்தில் கொள்ளப்படுவதற்காக சேர்க்கப்பட்டிருந்ததுடன் அச் சம்பளத்தின் 1/20 மேலதிக நேரக் கொடுப்பனவுகளின் கணிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2018 மே மாதத்தில் சேவையாற்றிய 11 ஊழியர்களிற்கு மேலதிக நேரக் கொடுப்பனவு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 515,613 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) 1997 ஒக்தோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் சுற்றறிக்கை** | | | |
| பதவி வெற்றிடமாகவுள்ள அல்லது உத்தியோகத்தர் கடமைக்கு அறிக்கையிடாத சந்தர்ப்பங்களின் போது ஆகக்கூடியது 3 மாதங்கள் பதில் கடமை அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட முடியும். எனினும் 3 மாத காலப்பகுதியை விஞ்சி பதில் கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த 9 சந்தர்ப்பங்கள் கூட்டுத்தாபனத்தில் காணப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் 5 ஆண்டு காலப்பகுதியை விஞ்சி அப் பதவிகளில் சேவையாற்றியிருந்தனர். | | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| **(ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள்** | | | |
| **(i) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு** | | | |
| மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் கணக்காய்வாளர் | | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ் அறிக்கை இவ் அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| **(ii)** | **2003 சனவரி 01 ஆம் திகதிய பிஈடி/04 ஆம் இலக்க சுற்றிக்கை**<br><br>**2011 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி/58 ஆம் இலக்க சுற்றிக்கை**<br><br>**2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை** | | | |
| | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் தலைவரிற்கு 2003 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 30,000 தொகையும் 2011 மே 01 தொடக்கம் 2015 யூன் வரை ரூபா 60,000 தொகையும் 2015 யூன் தொடக்கம் ரூபா 80,000 தொகையும் அனைத்தும் உள்ளடங்கிய மாதாந்த படியாக செலுத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இத் தேவைப்பாட்டிற்கு முரணாக 2010 செப்தெம்பர் 07 ஆம் திகதிய 759.07.00(i) ஆம் இலக்க சபை அங்கீகாரத்தின் மூலம் 2010 ஒக்தோபர் 01 இலிருந்து கூட்டுத்தாபனத்தின் தலைவரிற்கு ரூபா 30,000 தொகையான மேலதிக உபசரணை படியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் இது 2018 திசெம்பர் 31 வரை மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. | 2,908,069 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| **(iii)** | **2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை** | | | |
| | • **2.3 ஆம் பந்தி** | | | |
| | மீளாய்வாண்டின் போது எம்எம் மற்றும் ஜேஎம் வகுதிகளில் உள்ள எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகளிற்கு உரித்தற்ற 137 உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தன. | 10,208,104 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| | • **3.2 ஆம் பந்தி** | | | |
| | 2018 ஆம் ஆண்டின் போது சேவையாற்றிய 03 தலைவர்கள் மற்றும் 02 பணிப்பாளர் | 695,873 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட |

| | | | |
|---|---|---|---|
| நாயகங்களினால் பயன்படுத்தப்பட்ட 3,756 லீற்றர் மேலதிக எரிபொருள் பயன்பாட்டிற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் 03 செயற்பாட்டு பணிப்பாளர்கள், பணிப்பாளரொருவர் (சந்தைப்படுத்தல்) மற்றும் பகுதித் தலைவர் ஒருவர் ஆகியோரால் பயன்படுத்தப்பட்ட 1,268 லீற்றர் மேலதிக எரிபொருள் பயன்பாட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | | வேண்டும். |
| **(iv) 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய பிஈடி 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை** | | | |
| மிகையூதியங்களை செலுத்துவதற்காக நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு மிகையூதியம் செலுத்துதல் உரித்தற்றிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் ஒவ்வொன்றும் ரூபா 45,000 படி மிகையுதியங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | 40,988,411 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| **(உ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள்** | | | |
| **(i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றிக்கை** | | | |
| ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையிலிருந்தும் 12 மாத காலப்பகுதியின் பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பான பாரிய திருத்தமொன்றின் பின்னர் அதாவது இவற்றில் எது முதலாவதாக இடம்பெறக்கூடுமோ அதன் பின்னர் எரிபொருள் நுகர்வு மீளப் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தானத்திற்கு சொந்தமான 47 வாகனங்கள் தொடர்பில் அத்தகைய எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ii) 2013 ஒக்தோபர் 07 ஆம் திகதிய 21/2013 ஆம் இலக்க சுற்றிக்கை**<br><br>**2 ஆம் பந்தி**<br><br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் நாளொன்றிற்கு 8 மணித்தியாலங்களை விடக் குறைவான காலப்பகுதி அல்லது மாதமொன்றிற்கு 5 நாட்களை விடக் கூடுதலான காலப்பகுதி ஒன்றிற்கு கூட்டுத்தாபனத்தின் ஊழியர் ஒருவரிற்கு வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் சேவையாற்றுவதற்கான மேலதிக நேரப் படிகள் பெறப்பட முடியாத போதிலும் 2018 மே மாதம் தொடர்பாக அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் உள்ளக சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் நாள் கொடுப்பனவு உள்ளடங்கலாக இரண்டு கொடுப்பனவுகளும் ஒரே வேலைக்காக 5 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்டமைக்காக ஏறத்தாழ 900 ஊழியர்களில் 350 இற்கு மேற்பட்ட ஊழியர்களிற்கும் ஒரே கடமைக்காக 10, 11 மற்றும் 12 நாட்களை எடுத்திருந்த சில உத்தியோகத்தர்களிற்கும் செலுத்தப்பட்டிருந்தன. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| **(ஊ) 1998 இன் 74 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க தேசிய அரச பேரவையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதிகாரச்சட்டம்**<br><br>2017/2018 ஆம் ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 82 உத்தியோகத்தர்களில் 11 நிறைவேற்று உத்தியோகத்தர்களால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தால் பேணப்பட்ட வங்கிக் கணக்கொன்றிற்கு ரூபா 179,000,000 வரை மேலதிகப் பற்று வசதியை வங்கி வழங்கியிருந்த போதிலும் ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் அவ் எல்லை விஞ்சப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக் கணக்கின் மேலதிகப்பற்று மீதி ரூபா 275,474,993 ஆக இருந்தது. மேலும் கூட்டுத்தானத்தால் பேணப்பட்ட ஏனைய வங்கிக் கணக்கின் மேலதிகப்பற்று எல்லை ரூபா 10,000,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் 5 மாதங்களின் போது இவ் எல்லையும் விஞ்சப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக் கணக்கின் மேலதிகப்பற்று மீதி ரூபா 8,825,452 ஆக இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சிய மேலதிகப்பற்று மீதிகளிற்கு வங்கியால் மேலதிக வட்டி அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேலதிகப்பற்றிற்கான வட்டியாக ரூபா 30,811,157 தொகை கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வங்கி நிறுவனம்சார் கிளையின் கணக்கு மீதி ரூபா 275,474,993 ஆக இருந்ததென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது ரூபா 235,474,993 ஆக திருத்தம் செய்யப்பட வேண்டும்.<br><br>மேலும் காசுப் புத்தகத்தின் பிரகாரமான மீதியாக இது காணப்பட்டதுடன் வங்கிக் கணக்கின் பிரகாரம் மேலதிகப்பற்று ரூபா 205,605,573.50 ஆக இருந்தது.<br><br>இங்கே காட்டப்பட்ட ரூபா 8,825,452 மீதி இலங்கை வங்கி டொரிங்ரன் கிளையின் காசுப் புத்தகத்தின் பிரகாரமான மீதியாக காணப்பட்டது. வங்கிக் கணக்கின் பிரகாரமான சாதகமான மீதி ரூபா 2,850,826.15 ஆக காணப்பட்டது. | வங்கி மேலதிகப்பற்று உரிய எல்லையை விஞ்சாதவாறு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 188,800,669 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 193,927,831 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 382,728,500 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்காக அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 479,000,000 தொகையான மானியம் இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2017 ஆம் ஆண்டிற்கான நட்டம் படிப்படியாக குறைவடைந்து 2018 ஆம் ஆண்டில் இலாபத்தை அடைந்திருந்தது. எனினும் நிதி விளைவுகளிற்கு ஆளணி வேதனங்கள், அரசாங்க வரிகள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் 2017 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு ரூபா 1,094,480,917 ஆக இருந்ததுடன் இது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,325,002,743 வரை அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதம் | 2018 | 2017 | 2016 |
| --- | --- | --- | --- |
| மொத்தலாப விகிதம் (சதவீதம்) | 13 | 17 | 17 |
| தேறியலாப விகிதம் (சதவீதம்) | 11 | (10.9) | (13.6) |
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 2 | 1.67 | 1.98 |
| விரைவு விகிதம் (தடவைகள்) | 1 | 1.40 | 1.62 |

கூட்டுத்தாபனத்தின் மொத்தலாப விகிதம் மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்த போதிலும் தேறியலாப விகிதம் அதிகரித்திருந்தது. நடைமுறை விகிதம் படிப்படியாக அதிகரித்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கையரின் தனித்துவத்தை உலகத்திற்கு கொண்டுவருவதற்காகவும் வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையர்களின் மதிப்பு மற்றும் அறிவாற்றலை முன்னேற்றுவதற்காகவும் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக ஐரோப்பியாவிலுள்ள இத்தாலி அல்லது வேறு நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரூடியோவில் ரூபாவாஹினி அலைவரிசையை நடாத்துவதற்கும் அதற்குத் தேவையான உபகரணத்தை நிதி அமைச்சின் உடன்படிக்கையின் கீழ் குத்தகை அடிப்படையில் தற்காலிகமாக பெற்றுக்கொள்வதற்கும் 2014 திசெம்பரில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. சர்வதேச ரீதியாக செய்மதி தொழில்நுட்பத்தை வழங்குவதில் ஈடுபட்டிருந்த பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள கம்பனியொன்றிற்கு முற்பணமாக ரூபா 3,454,279 தொகை 2015 சனவரி 02 இல் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பில் நிதி அமைச்சின் எழுத்து மூலமான உடன்படிக்கை அல்லது அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் இச் செயற்பாடு 2015 சனவரியின் பின்னர் முழுமையாக கைவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஐரோப்பிய நாடொன்றிலிருந்து செய்மதி தொழில்நுட்பத்தினூடாக தொலைக்காட்சி அலைவரிசையை நடாத்துவதற்கு 2015 சனவரி 02 இல் முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 3,454,279 கொடுப்பனவு தொடர்பாக உரிய நிறுவனத்திற்கெதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னர் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ் வழக்கு தற்போதும் நடைபெறுகின்றது. | சட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மீளப்பெறுதல் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களிற்கு நூலகத்தால் வழங்கப்பட்ட ரூபா 3,382,650 பெறுமதியான 1,562 ஒளிப்பதிவு நாடாக்கள் (cassettes) இவ் அறிக்கைத் திகதி வரையிலும் மீளப்பெறப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளப் பெறுதல் அடிப்படையில் வழங்கப்பட்ட ஒளிப்பதிவு நாடாக்களை மீளப் பெறுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளித்தரப்பினர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு உடன்படிக்கை காலப்பகுதியினுள் உரிய எண்ணிக்கையான ஒளிபரப்புக்களைச் செய்ய முடியாதிருந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 32,633,373 பெறுமதியான காலக்கழிவு 2018 ஆம் ஆண்டின் போது நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 69,854,416 பெறுமதியான காலக்கழிவினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு உடன்படிக்கை காலப்பகுதியினுள் உரிய எண்ணிக்கையான ஒளிபரப்புக்களைச் செய்ய முடியாதிருந்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்பு செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததால் அந் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து வருமானம் எதனையும் உழைக்காமல் காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை உரிய காலப்பகுதியினுள் ஒளிபரப்புச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற றியோ ஒலிம்பிக் (Rio Olympic) போட்டியை ஒளிபரப்பு செய்யும் உரிமைக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கும் ஸ்ரார் இந்தியா பிறைவேட் லிமிட்டட்டிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2016 ஆகஸ்ட் மாத்தில் ஸ்ரார் இந்தியா பிறைவேட் லிமிட்டட்டிற்கு செலுத்தப்பட வேண்டிய ஐக்கிய அமெரிக்க டொலர் 125,000 தொகை 2 ஆண்டுகளிற்கு மேலாக தாமதித்து செலுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக வெளிநாட்டு நாணய வீதங்களில் தளம்பல் ஏற்பட்டமை காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2,122,920 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அந் நட்டத்திற்கு எவராவது உத்தியோகத்தரின் தாமதமொன்றாக இருந்தால் அவரிடமிருந்து அது அறவிடப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 35 ஆண்டு காலப்பகுதியினுள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் நடாத்தப்படுகின்ற பௌத்தலோகா மாவத்தை, கொழும்பு 7 இல் அமைந்துள்ள உயர் பெறுமதியையுடைய கட்டிடம் மற்றும் 8 ஏக்கர் காணியின் சட்ட ரீதியான உரிமைத்துவம் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் அவ் ஆதனத்தின் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையால் நடாத்தப்படுகின்ற சீட்டிழுப்பு நிகழ்ச்சியை ஒளிபரப்பு செய்வதற்கான தனியுரிமை அதிகாரம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் சீட்டிழுப்பு நிகழ்ச்சியை ஒளிபரப்பு | தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பன இரண்டு வாடிக்கையாளர்களாக காணப்பட்டதுடன் அவை முகவர்களூடாக வான் காலத்தை ஒதுக்கீடு செய்கின்றன. சீட்டிழுப்பு | முகவரொருவரூடாக வியாபாரத்தில் ஈடுபடாமல் அரசாங்க நிறுவனங்களுடன் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற போது நேரடியாக |

| | | |
|---|---|---|
| செய்வதற்கான வான் காலம் தனியார் முகவர்களுடாக அவ் இரண்டு நிறுவனங்களால் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆகையால் லொத்தர் சபையிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு பெறப்பட்ட வருமானத்தில் 15 சதவீத தரகு இடைத் தரப்பினரிற்கு செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக கூட்டுத்தானத்தின் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்களிற்கு தரகுகள் செலுத்தப்பட வேண்டியிருந்தன. சீட்டிழுப்பு நிகழ்ச்சியை ஒளிபரப்புவதன் மூலம் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 763,356,152 ஆக இருந்ததுடன் அதன் மீது கூட்டுத்தாபனத்தால் உற்பத்திக் கிரயமாக செலவிடப்பட்ட ரூபா 154,010,000 தொகை, முகவர் தரகு ரூபா 91,401,923 தொகை மற்றும் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர் தரகு ரூபா 1,078,703 தொகை ஆக அவற்றின் மீதான மொத்தச் செலவினம் ரூபா 246,490,626 தொகையாக காணப்பட்டது. எனினும் அரச நிறுவனங்கள் நேரடியாக தொடர்புபட்டிருக்காததன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 91,401,923 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | நிகழ்ச்சியை ஒளிபரப்பு செய்வதற்கான தனியுரிமை அதிகாரம் கூட்டுத்தாபனத்தால் சொந்தமாக்கப்பட்டிருந்த போதிலும் வாடிக்கையாளர் பெறுமதியை வழங்கும் உரிமை உரிய நிறுவனங்களிற்கு சொந்தமாக காணப்பட்டன. அதற்கிணங்க அவர்களின் வான் காலப் பெறுமதி முகவர்களுடாக அந் நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்ததுடன் இவ் இரண்டு நிறுவனங்களும் முகவர்களுடாக வருவதால் ஏனைய நிறுவனங்களை போல் 15 சதவீத தரகு செலுத்தப்பட வேண்டியிருந்தது. | வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நல்லிணக்க அலைவரிசையின் பிரதான கட்டுப்பாட்டு அறைக்காக வெளிநாட்டு வழங்குநரொருவரிடமிருந்து ரூபா 48,600,844 பெறுமதியான தொடர்பாடல் உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப குறிப்புரைகளின் பிரகாரம் உத்தரவாதக் காலப்பகுதி 5 ஆண்டுகளாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வழங்கல் உடன்படிக்கையில் ஒரு ஆண்டாக உத்தரவாதக் காலப்பகுதி குறிப்பிடப்பட்டிருந்தது. | நல்லிணக்க அலைவரிசையின் பிரதான கட்டுப்பாட்டு அறைக்காக ரூபா 48,600,844 பெறுமதியான தொடர்பாடல் உபகரணத்தை கொள்வனவு செய்யும் போது அவ் உபகரணத்திற்கான கேபிள்கள், இணைப்புக்கள் மற்றும் திரைகள் போன்ற உப பாகங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ் உப பாகங்கள் தொடர்பாக உற்பத்திக் கம்பனியால் அதிகாரம் அளிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. பிரதான உபகரணத்திற்காக மாத்திரமே அதிகாரம் அளிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | உடன்படிக்கைகளை கைச்சாத்திடும் போது உள்ளடக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் மீது முறையாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.<br><br>கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்பக் குறிப்புரையின் பிரகாரம் வழங்கல் உடன்படிக்கை திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப குறிப்புரைகளின் பிரகாரம் உபகரணத்தின் பாகங்களிற்கான உத்தரவாதக் காலப்பகுதி 5 ஆண்டுகளாக காணப்பட்டதுடன் உரிய உபகரணத்திற்காக 5 ஆண்டு உத்தரவாதக் காலப்பகுதி வழங்கப்பட்டிருந்தமை கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் வழங்கல் உடன்படிக்கையின் பொதுவான நிபந்தனையின் கீழ் உத்தரவாதக் காலப்பகுதி ஒரு ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மேலும் வழங்குநர் வாரத்தின் எந்த நாளிலும், நாளின் 24 மணித்தியாலமும் சேவை உதவியை வழங்குவதற்கு உடன்பட்டிருந்த போதிலும் 64x64 டிஜிட்டல் வீடியோ ஆழிகள் (Switches) கொள்வனவு செய்யப்பட்டு 9 மாதங்கள் கடந்த பின்னர் பழுதடைந்திருந்ததுடன் இது தொடர்பான சேவை வழங்கல் 21 நாட்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவ் உபகரணத்திற்கான மேலதிக முறைமை மற்றும் குறித்த சில உபகரணத்திற்கான உதிரிப்பாகங்களை வழங்குவதற்காக குறிப்புரைகளில் இணங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையை மீறுதல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுதல். |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1 இன் பிரகாரம் ஒரே பொருட்களிற்காக ஒரே வழங்குநரிற்கு கட்டளையொன்றை மீள வழங்கும் சந்தர்ப்பத்தின் போது அக் கட்டளையின் பெறுமதி முன்னைய ஒப்பந்த பெறுமதியின் 50 சதவீதத்தை விஞ்சக்கூடாத போதிலும் 2018 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரியில் ஐக்கிய அமெரிக்க டொலர் 82,256.12 இற்கு 3 கமராக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆகக்கூடிய நன்மைகளை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குநரிடமிருந்து 2018 மார்ச் மற்றும் ஏப்ரலில் 2 ஒலிபரப்பு தர எச்.டி. கமராக்கள் ஐக்கிய அமெரிக்க டொலர் 47,685.52 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க முன்னைய கட்டளைப் பெறுமதியின் 50 சதவீதம் ஐக்கிய அமெரிக்க டொலர் 6,557.46 ஆல் விஞ்சப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக வாடகை அடிப்படையில் உபகரண வசதிகளை பெற்றுக்கொள்ளும் போது மேடை, வெளிச்சம் மற்றும் வீடியோ திரைகள் (Video walls) போன்ற வசதிகள் 2 தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டஙகளிற்காக ரூபா 1,845,900 தொகை செலவிடப்பட்டு ராஜகிரிய பகுதியின் வழங்குநர் ஒருவரிடமிருந்து 4 சந்தர்ப்பங்களில் வாடகைக்கு பெறப்பட்டிருந்தன. எனினும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்விக்காக போதியளவு காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக பெறுவதிலுள்ள தாதங்கள் காரணமாக சில குறைவான விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. எனினும் தாமதமாக பெறப்பட்டிருந்த இரண்டு குறைந்த விலைமனுக்களை நிராகரிப்பதற்கும் உயர் விலையையுடைய விலைமனுவை தெரிவு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க பெறுகை வழிகாட்டி ஏற்பாடுகளை பின்பற்றி சிறந்த வழங்குநரை தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை தவிர்த்து விசேட தரப்பு ஒன்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தமை மேலும் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆகக்கூடிய நன்மைகளை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டது. மேலும் முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கேள்விகோரலிற்கான ஆவணங்களில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தொலைநகல் இயந்திரங்கள் ஊடாக விலைமனுக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 1,041 நிரந்தர மற்றும் 8 ஒப்பந்த பதவியணியினர் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 1,049 ஆக காணப்பட்டது. எனினும் அத்திகதியில் உள்ளவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிரந்தரப் பதவியணியினரின் எண்ணிக்கை 864 மாத்திரமேயாகும் அத்துடன் அத்திகதியில் உள்ளவாறு அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 110 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க அத் திகதியில் உள்ளவாறு நிரந்தரப் பதவிகளில் 75 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் 06 பதவிகள் பதிற்கடமை அடிப்படையில் காணப்பட்டன. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட வேண்டும். |
| (ii) | 2011 யூன் 30 ஆம் திகதிய டிஎம்எஸ்/ஈ4/37/4/231/1-1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயத்தின் கடிதத்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிராத 11 பதவிகளிற்காக ஒப்பந்த அடிப்படையில் 16 உத்தியோகத்தர்களும் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பொறுப்பு ஒப்படைத்தல் அடிப்படையில் 22 உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | | |
| (iii) | மேலே குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் 2011 யூன் 30 இல் உள்ளவாறு பதவி வகித்தவர்களுக்கு மாத்திரம் சில பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எனினும் பதவி வகித்தவர்களிற்காக மாத்திரம் அப் பதவிகளில் 301 உத்தியோகத்தர்கள் காணப்பட்டதுடன் அப் பதவிகளின் எண்ணிக்கையில் பதிற்கடமை அடிப்படையில் 03 உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவின் பிரகாரம் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத உத்தியோகத்தர்கள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுநர் பதவிகளிற்கு பதிற்கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்த ஆறு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் ஏனைய பொருத்தமான பிரமாணங்களிற்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமென்று தயாரிக்கப்பட்டிருந்தது. கூட்டிணைந்த திட்டத்தின் நிதி எதிர்வுகூறல்களின் பிரகாரம் 2018 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அடைந்துகொள்ளுதல் தொடர்பான முறையான ஆய்வொன்றின் பின்னர் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 2,350 மில்லியன் தொகையான வான் கால விற்பனை வருமானத்தையும் ரூபா 60 மில்லியன் தொகையான வரிக்கு முன்னரான இலாபத்தையும் உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கூட்டிணைந்த திட்டத்தில் ரூபா 479 மில்லியன் அரசாங்க மானியம் உள்ளடக்கப்பட்டிராததன் காரணமாக அத் திகதியிலுள்ளவாறான வான் கால விற்பனை வருமானம் ரூபா 1,698 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 190 மில்லியனாக காணப்பட்டது. | | |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தால் முன்மொழியப்பட்ட பிரதான முதலீடுகள், இயலளவு விரிவுபடுத்தல் மற்றும் ஏனைய பிரதான பெறுகை உள்ளடங்கிய பெறுகைத் திட்டமொன்று 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தினால் வணிகச் சூழலிலுள்ள பலம் (Strengths), பலவீனம் (Weaknesses), சந்தர்ப்பங்கள் (Opportunities) மற்றும் அச்சுறுத்தல்கள் (Threats) தொடர்பான மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அதில் உள்ளடக்கப்பட்ட பலவீனங்களை (Weaknesses) குறைத்துக் கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்டிருந்த போதிலும் பாதகமான நிதி நிலைமை காரணமாக, அந்த பலவீனங்களைக் குறைத்துக் கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த பணிகள் எதனையும் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறையில் அமுல்ப்படுத்தப்படக் கூடிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக அங்கீககரிக்கப்பட்ட இரண்டு பதவிகளுடன் 04 முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளடங்கலாக 06 உத்தியோகத்தர்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு ஐயவினாக்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்காததுடன் 11 கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரமே தலைவரிற்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும் அவ் அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சீர் செய்வதற்கு ஆளுகை சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் இதில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 யூன் 30 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கூட்டுத்தாபனத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினரில் உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் எனும் பெயரிலான இரண்டு பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதில் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2018 ஒக்தோபர் 01 இலிருந்து வெற்றிடமாக உள்ளதுடன் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவுகளின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான நிதித் தரவுகளிற்கிடையே பாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான நடைமுறை நிலைமை மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |